# அன்னை ஸைனப் ரழியல்லாஹு அன்ஹா



அன்னை ஸைனப் ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் புனித அடக்கஸ்தலம் - ஜன்னத்துல் பகீஃ, மதீனா

ஹஸ்ரத் ஸைனப் பின்த் குஸைமா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் ஏழை எளியோர்க்கு அதிகமாய் அன்னதானம் அளிப்பதால் அவர்களுக்கு ‘உம்முல் மஸாக்கீன்’ (ஏழைகளின் அன்னையார்) என்றொரு சிறப்புப் பெயருமுண்டு. முதலில் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரலியல்லாஹு அன்ஹு) என்பவர் இவர்களை மணந்தார்கள். ஹிஜ்ரி 3 ஆம் ஆண்டில் நிகழ்ந்த உஹுத் யுத்தத்தில் அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் வீரசுவர்க்கம் புகுந்த பின்னர் அதேயாண்டில் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள் ஹஸ்ரத் ஸைனப் (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களை திருமணம் செய்ய நேர்ந்தது. திருமணமாகி மூன்று மாதங்கள் மட்டுமே

ஹஸ்ரத் ஸைனப் (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் ஜீவித்திருந்தார்கள். கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் காலத்திலேயே மரணமான மனைவியர் ஹஸ்ரத் கதீஜா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களும் ஹஸ்ரத் ஸைனப் (ரலியல்லாஹு அன்ஹா) அவர்களுமாகிய இருவருமேயாவர். இறையடி சேரும்போது ஹஸ்ரத் ஸைனப் (ரலியல்லாஹு அன்ஹா) நாயகிக்கு வயது 30 ஆகும்.




மேலும் பல இஸ்லாமிய பெரியார்களின் சரிதைகளை, எங்கள் இணையத்தளத்தில் வாசியுங்கள்:

www.mailofislam.com